உ

சிவமயம்



நயினை உயர்சைவ வேளாண்குல திலகர்

அமரர் திருமதி. பொன்னுத்துரை லலிதாம்பாள்

(வாலாம்பிகை)

அவர்களின் அமரத்துவம் குறித்த 31ம் நாள்

# நீங்கா நினைவமுதம்

01.12.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நயினை
உயர்சைவ வேளாண்குல திலகர்

அமரர்

# திருமதி பொன்னுத்துரை லலிதாம்பாள்

**(வாலாம்பிகை)**

**அவர்களின்**

அமரத்துவம் குறித்த 31ம் நாள்

# நீங்கா நினைவமுதம்

**01-12-2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





மனிதருள் மாணிக்க குன்றுகளாய், வையத்தில் மகளெனப்பிறந்து நின்று, மண்ணில் மங்கையாய் வாழ்ந்துயர்ந்து, தகவினில் குல விளக்காய், அன்னையாய் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை நல்வழிநடாத்தி அன்போடும் பண்போடும் வளர்த்து, எம் வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்து பல குடும்பங்களின் நல்வாழ்வுக்காக வழிகாட்டி அக்குடும்பங்களின் வாழ்வில் ஒளியூட்டி இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எம் அன்புத் தெய்வத்தின் திருப்பாதங்களில் பக்தியுடனும், அன்புடனும் அஞ்சலி செய்து இம்மலரை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

-குடும்பத்தினர்

**முடிசார்ந்த மன்னருமற்றுமுள் ளோரு முடிவிலொரு**
**பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதூங் கண்டுமிந்தப்**
**படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்**
**அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே**

**-பட்டினத்தார்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.




| | |
|---|---|
| பிறப்பு | மறைவு |
| 06.04.1929 | 01.11.2003 |

## திதிவெண்பா

ஆண்டு சுபானு ஐப்பசி மூவைந்துசனி
பூண்ட பூர்வபக்க அட்டமியில் – வேண்டி
பொன்னுத்துரை லலிதாம்பாள் பூவோடு விட்டகன்றாள்
மன்னும் அரன்தாள் மகிழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு காட்டிய ஒரு ஜீவனின் வாழ்க்கையின் வரலாறு

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்ற முதுமொழிக்கிணங்க இலங்கை இத்துணைச் சிறப்புப் பெற்றிலங்கக் காரணம் எழில் கொண்ட யாழ்ப்பாணம் இலங்கையின் வடபால் அமைந்திருப்பதுதானா? என்பது சரித்திர ஆராய்ச்சியாளரின் சிந்தனைக்குரிய விருந்தாக அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் தென்மேற்கே அமைந்து யாழ்நகருக்கு அழகு சேர்ப்பவை சப்ததீவுகள் எனலாம். சிரத்தை அழகுபடுத்துவதற்குச் சிறப்புற்ற நவமணிகளைக் கொண்டு கிரீடங்களை ஆக்கி அணிவர் கிரீடமின்றேல் சிறப்பில்லையல்லவா? இலங்கையின் கிரீடம் எனபோற்றப்படுபவை சப்ததீவுகள் எனலாம். இவ் சப்த தீவுகளுள் நடுநாயகமாக விளங்குவதும், சரித்திரப் புகழ் மிக்கதும், அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றென போற்றப்படும் புவனேஸ்வரிபீடத்தில் அம்பிகை அமர்ந்து அருளாட்சி புரிவதும், சித்தாத்தர் எனத்திகழ்ந்த புத்தபிரானினதும், மணிமேகலையினதும் புனித பாதங்கள் பதிக்கப்பட்டதும், சர்வமத சந்நிதியாக விளங்குவதும், சுற்றுலாப்பயணிகளின் வருகைக்குரிய இடமாக விளங்கு வதும், அருள்தீவாகவும், ஆன்மீகத் தீவாகவும் விளங்கி மணிபல்லவம் என போற்றப்படுகின்ற பெருமைக்குரியது நயினாதீவாகும்.

இப்புண்ணிய பூமியிலே பிறப்பதற்கும், இறப்பதற்கும் புண்ணியம் செய்யவேண்டும் என தவசிரேஷ்டர்கள் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். அந்தவகையில் நயினாதீவின் நடுநாயகமாக விளங்கும் நடுவகாட்டுப்பதியில் உயர்வேளாண்குடி மரபில் வந்த அமரர்கள் கதிரேசுவும் அன்னப்பிள்ளையும் இல்லற தர்மம் சொல்லிய முறைப்படி நல்லறம் செய்த நற்றவப் பேறாய்" அமரர் நாகரெத்தினம், கதிராசிப்பிள்ளை, அமரர் லலிதாம்பாள் (வாலாம்பிகை) குமரையா, அமரர் தம்பிராசா எனும் ஐந்து மகவுகளை பெற்று இன்புற்று வாழ்ந்தனர். அவர்தம் பிள்ளைச் செல்வங்களுள் மூன்றாவது பெண்பிள்ளையாக 06-04-1929 அன்று அமரர் இவ்வையத்தின் கண் அவதரித்தார். இவர் இளமையிலே துணிவும் மனவுறுதியும் விவேகமும் கொண்டு விளங்கினார். இல்லறப் பருவத்தையடைந்தபோது பெற்றோர்கள் இவருக்கு இல்லறம் எனும் நல்லறத்திற்காக நயினாதீவு நான்காம் வட்டாரத்தில் உயர் வேளான் குடிமரபில் வந்த அமரர்கள் குணரெத்தினம் - இராமாசிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன் பொன்னுத்துரை அவர்களை திருமணம் செய்து வைத்தனர். இக்காலப்பகுதியில் அமரரின் மூத்த சகோதரி நாகரெத்தினம் அவர்களுடைய இழப்பின் காரணமாக அன்னாரது பிள்ளைகளான அமரர் நல்லையா, மனோன்மணி, சரவணபவான் ஆகியோரை கண்ணை இமைகாப்பது போல அன்போடும் பண்போடும் பாசத்தோடும் வளர்த்து வந்தார். இதன் மூலம் பிள்ளைச் செல்வம் இல்லையே என்ற குறையை அறவே போக்கிக் கொண்டார். பிள்ளைகளும் தாய் இல்லையே என்ற வேதனை தெரியாத வகையில் "குஞ்சியம்மா" என்று அன்போடு அழைத்து தாயின் கட்டளைகளுக்கு கீழ்பட்டு வாழ்ந்து வந்தனர். அமரர் தன் சகோதர வழியில் வந்த மைத்துனர் மைத்துனிகளான அமரர் பூரணலிங்கம், அமரர் இராசமணி, மற்றும் சந்தானலட்சுமி, சின்னம்மா ஆகியோருடனும் தனது திருமண உறவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகவந்த மைத்துனர் மைத்துனிகளான பாக்கியரத்தினம், பராசத்தி காலம் சென்றவர்களான செல்லத்துரை, பாலசுந்தரம், மற்றும் செல்வரெத்தினம், குமரப்பெருமாள் ஆகியோருடனும் ஒற்றுமையாக, அன்போடும் பாசத்தோடும் உறவு சொல்லியும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு வாழ்க்கை நடாத்தி வந்த காலப் பகுதியிலே மகனார் அமரர் நல்லையா அவர்களுடைய இழப்பினால் மிகுந்த துயரத்தின் மத்தியிலே அவரது மரணக் கிரியைகளை முன்னின்று நடாத்தி வைத்தார். இக் காலப்பகுதியிலே தனது அன்புத் தம்பி குமரையா அவர்களின் பாரியாரின் திடீர் மறைவினால் ஏற்பட்ட சோகம் அமரரை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தியது. இவ் இழப்பின் காரணமாக தனது தம்பியின் குடும்பத்தில் மிகுந்த பொறுப்போடு பங்கெடுத்தார். தம்பியின் பிள்ளைகளை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்து ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவதில் முன்னின்று உழைத்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் வேளையில் இல்லறப் பருவம் ஏய்திய மகளார் மனோன்மணிக்கு நயினாதீவு 5ம் வட்டாரத்தில் வசித்த அமரர்கள் வேலாயுதம் - தங்கமுத்து தம்பதியினரின் மூன்றாவது ஆண்மகன் தருமலிங்கம் அவர்களை திருமணம் செய்து வைத்து பாலமுருகன் என்ற பேரனையும் கண்டு மகிழ்வோடு வாழ்ந்து வந்தார். இருந்தாலும் இம்மகிழ்ச்சி பலகாலம் நீடிக்கவில்லை. மருமகன் அவர்களுடைய திடீர் இழப்பு அமரர் அவர்களை ஆறாத்துயரில் ஆழ்த்தியது மருமகனின் மரணக்கிரியைகளை முறைப்படி முன்னின்று நடாத்திவைத்ததுடன் மகளாரையும் பேரனையும் தன்னோடு கூடவே வைத்திருந்ததுடன் பேரன் பல்கலைக்கழகக்கல்வி பெற அத்திவாரமாக, வழிகாட்டியாக திகழ்ந்தார். மகனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணபவானுக்கு நயனாதிவு 8ம் வட்டாரத்தில் வசித்த கிருஷ்ணசாமி - அன்னபூரணம் தம்பதியினரின் சிரேஷ்டபுத்திரி தருமதேவி அவர்களை திருமணம் செய்து வைத்து குகநேசன் என்ற பேரனையும் கண்டு மகிழ்ந்திருந்தார்.

92ம் ஆண்டு காலப்பகுதியில் அமரர் அவர்களை கொடிய வாதநோய் வாட்டத் தொடங்கியது நாளடைவில் நடக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டார். நடக்க முடியாவிட்டாலும் குடும்ப நிர்வாகத்தை சிறந்த முறையிலே மேற்கொண்டுவந்தார். இக்காலப்பகுதியிலே அமரருடைய அன்புத்தம்பி தம்பிராசா அவர்களுடைய மறைவுச் செய்தி அமரரை பெரிதும் வாட்டியது. உடன்பிறப்பை நீண்ட நாட்கள் காணாத சோகம் அவரை பெரிதும் வாட்டியது. அவருடைய மனம் அக்கவலையினின்றும் மீள எடுத்த நாட்கள் பல இருந்தும் அன்புத் தம்பி குமரையாவையும் அவர் தம் பிள்ளைகளான தாம் தூக்கி வளர்த்த குஞ்சுகளைக் காண வேண்டும் என்ற துடிப்பும் ஆவலும் அமரரிடம் மேலோங்கி இருந்ததை உணர முடிந்தது. அமரர் அமராவதற்கு சில மாதங்களின் முன்னர் தம்பி குமரையா அவர்கள் நடக்க முடியாத நிலையிலும் தனது உடன் பிறப்பைக் காண வேண்டுமென்ற துடிப்பில் வந்து பார்வையிட்டு அளவளாவிச் சென்றதன் மூலம் அமரரின் ஆசை நிறைவேறிக் கொண்டது. தம்பியைக் கண்டதும் தம்பியின் பிள்ளைச் செல்வங்களைக் காண வேண்டும் என்ற துடிப்பும் மேலோங்கி இருந்த வேளையில் நாட்டு நிலமை ஓரளவு சீர் வந்ததன் பயனாக. உள்ளூரிலிருந்து மருகர் கிளியும், சிறியும் மாமியை வந்து பார்த்து சுக நலன்களைப் பகிர்ந்து சென்றதன் பின். சுவிஸிலிருந்து மருகர் நித்தியானந்தமும், லண்டனில் இருந்து மருகர்கள், மணி, குண்டுமணி மற்றும் மருகி தயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரும். அன்பு மாமியை வந்து முத்தமிட்டு பசுமையான பழைய நினைவுகளை மீட்டிச் சென்றனர். இருந்தும். பிரியமுடன் முழுப் பெயர் சொல்லி அழைக்கும் மருகர்சச்சி தானந்தத்தையும் தன் கூடவே வைத்து வளர்த்து பல்கலைக் கழகம் வரை செல்ல வைத்த மருகர் ஜெயபாலுவையும் நேரில் ஒரு தடவை காண வேண்டுமென்ற ஆசை இருந்தது. இருந்தும் சந்தர்ப்ப கால சூழ்நிலை காரணமாக நேரில் காண முடியாவிட்டாலும். அமரர் ஆவதற்கு மூன்று மாதங்களின் முன்னர் அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களுடன் உரையாடி பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் தனது ஆவலை ஓரளவு பூர்த்தி செய்து கொண்டார் என்றே கூற வேண்டும். ஏனைய மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடனும் உற்றார் உறவினர் நண்பர்களுடனும் அதிக அன்புடனும் பாசத்துடனும் பழகி வந்தார் எனலாம்.

அமரர் லலிதாம்பாள் தனக்கே உரித்தான இயல்புகளையும் குணாம்சங்களையும் கொண்டு விளங்கியவர். தன் உழைப்பால் ஊர்போற்ற உயர்ந்து நின்றவர். இரவு 10, 11 மணிவரையும் இயற்கைதந்த நிலவின் ஒளியில் மிளகாய் கன்றுக்கு அடிகிண்டிவிட்டு தலையிலே கடகத்தையும் கையிலே கொண்டு சென்ற ஓலைப்பையையும் கொண்டு பாய்ச்சல் நடையிலே வந்த நாட்கள் பல. இக்காட்சியை பார்ப்பவர்களுக்கு நாகம்மாள் என்ற நாவலில் வருகின்ற நாகம்மாள் என்ற பாத்திரத்தினுடைய கற்பனையான சாயலை நிஜத்திலே தரும் எனலாம். விவசாயத்தின் மூலம் கிடைத்த வெங்காயத்தையும், மிளகாயையும் தன்னந்தனியே பரம் அண்ணரின் லோஞ்சியிலும் செல்லையா அப்பாவின் 'கல்யாணி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்சிலுமாக கொண்டு சென்று யாழ் பெரியகடையில் விற்றுவிட்டு வருகின்ற ஆற்றல் அவருக்கே உரியது. அமரர் இயல்பாகவே நகைச்சுவை கலந்து சிந்திக்கக்கூடிய வகையில் பேசும் ஆற்றல் கொண்டவர். அமரருடைய நகைச்சுவை கலந்த கதைகளை கேட்க வேண்டி வீட்டுக்கு வருபவர்கள் பலர் அமரர் நோய்வாய்ப்படு முன்னர் ஊரிலே நடைபெறும் கொண்டாட்ட வைபவங்களை முன்னின்று நடாத்திபலரதும் நன்மதிப்பை பெற்றவர். சேலையை தூக்கி இடுப்பிலே செருகிக் கொண்டு "அதுகளை இஞ்ச கொண்டாருங்க பெடியள்" என்று உரத்தகுரலில் கூறிய அந்த வார்த்தைகளின் வைராக்கியம் இன்னும் எம்செவிப்புலன்களில் கணீரென ஒலித்துக் கொண்டிருக்கிறது. அமரர் எந்த விடயத்தையும் ஒரேபேச்சில் நேர் நேரே பேசிவிடும் தன்மை கொண்டவர். "வெட்டு ஒண்டு துண்டு இரண்டு"ஆக இருக்க வேண்டும் என அடிக்கடி கூறுவார். அமரரை அடக்க நினைத்த எத்தனையோ ஆண்சிங்கங்கள் அடங்கிப்போன சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. இது அவரது பெருமைக்காக கூறும்விடயமல்ல, அமரருடைய துணிவும், மனவைராக்கியமும் கொண்ட தன்மையினை புலப்படுத்தி நிற்கின்றது. அமரர் மிகுந்த இறைபக்தி கொண்டவர் திருநீற்றை எப்பொழுதும் பரவிப் பூசியிருப்பார் அமரர் நடக்க முடியாத நிலையில் இருந்தாலும் தன்னை சந்திக்க வருபவர்கள் மூலமாக மூலைமுடுக்குகளுக்குள் நடக்கும் விடயங்களை கூட அறிந்து விடுவார். வெளியில் திரிபவர்களுக்கே தெரியாத செய்திகள் எல்லாவற்றையும் முன் கூட்டியே அறிந்துவிடும் ஆற்றல் கொண்டவர். எல்லோரையும் வேற்றுமைகாணாது ஒரே மாதிரி அன்பு செலுத்தி அன்போடும் பண்போடும் பழகுபவர், சுகதுக்க நிகழ்வுகளில் கலந்து இன்பதுன்பங்களில் பங்கெடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்பவர் எனலாம். புதிய பந்தி இவ்வாறாக வாழ்ந்து ஒன்றல்ல, இரண்டல்ல எத்தனையோ குடும்பங்களின் நல்வாழ்வின் வழிகாட்டியாக, ஒளி காட்டியாக திகழ்ந்த அந்த லலிதாம்பாளினுடைய உயிர் 01-11-2003 அன்று பிரியும் என்று யாரும் நினைத்திருக்கவேயில்லை. வழமைக்கு மாறாக காலைக்கதிரவன் தன் செங்கதிர்களை சற்று குறைவாகவே பரக்கவிட்டிருந்தான். அன்றைய தினம் காலையில் இருந்து அமரரது உடல்நிலை மிகவும் தளர்ந்திருந்தது. மதியத்தை நெருங்கிய அந்தவேளை, எத்தனையோ ஜீவன்களுக்கு உதவிசெய்த, எத்தனையோ ஜீவன்களை வளர்த்து ஆளாக்கிய அந்த கரங்கள் சோர்ந்தன, பாய்ச்சல் நடையிலே சென்ற அந்த பாதங்கள் அசைய மறுத்தன, வைராக்கியம் பேசிய வாய்களிலிருந்து வார்த்தைகள் வரமறுத்தன உடல்சோர்ந்து குளிர்ந்தது. நண்பகல் 12 - 05 ஐக்கடிகார கம்பிகள் கடந்து கொண்டிருந்த வேளை அமரர் லலிதாம்பாள் (வாலாம்பிகை) இவ்உலக வாழ்க்கையினை இன்பமுடன் முடித்துக் கொண்டு இறைவியின் பாதக்கமலங்களை சென்றடைந்தார் அந்த ஜீவனுடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

முற்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தோத்திரப்பாக்கள்



## விநாயகர் துதி

ஓம் கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பசஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நவாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

அல்லல்போம் வல்வினை போம் அன்னைவியிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்

## தேவாரம்

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினுமுனகழல் விடுவேனல்வேன்
றாழிளந் தடம்புன நயங்கு சென்னி
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமா நீவதொன் றெமக்கில்லையே
அதுவோ வுனதின் னருள் ஆவடு துறை அரனே

- சம்பந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னை பணி கொண்டாய்
வேண்டி நீயாக அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு எனில்
அதுவும் உன்தன் விருப்பன்றே

- மாணிக்கவாசகர் -

# திருவிசைப்பா

அன்னமாய் விசும்பும் பறந்தயன் தேட
அங்கனே பெரிய நீ சிறிய
என்னை ஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறவேன்
முன்னம் மாலறியா ஒருவனாமிருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே
கங்கை கொண்ட சேழேச்சரத்தானே

- கருவூர் தேவர் -

# திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

– சேந்தனார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்.
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

- காரைக்கால் அம்மையார் -

# அபிராமி அந்தாதி

வந்திப்பவர் உன்னை, வானவர்
தானவர் ஆனவர்கள்;
சிந்திப்பவர், நல் திசைமுகர்
நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர்;
பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம்
எம்பிராட்டி நின் தண்ணளியே

- அபிராமிப்பட்டர் -

# நயினை மான்மியம்

பெற்றதா லின்னை பெறு முயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோர்
குற்றதா லன்னை விரும்பிய வனைத்து
முதவலா லன்னை யெக்கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாகபூஷணியால்

- நயினை நாகமணிப்புலவர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனோ
விஞ்சுறு மாவுன தடிசேர
விம்பம தாயருள் அருளாயோ
நஞ்சமு தாவுணும் அரனார்தம்
நன்கும ராவுரை அருள்பாலா
தஞ்சென வாமடி யவர் வாழ்த்
தஞ்சையில் மேவிய பெருமாளே

- அருணகிரிநாதர் -

# வாழ்த்து

மழைவ ழங்குக் மன்னவன் ஓங்குக்
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக்
தழைக அஞ்செழுத் (து) ஓசை தரையெல்லாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே

-கோயிற்ப் புராணம்

வான்முகில் வழாது பெய்க் மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க.குறைவிலா (து) உயிர்கள் வாழ்க.
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

- கந்தபுராணம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை

# ஸ்ரீ நாகபூசணியம்மை

# திருவூஞ்சல்

(ஸ்ரீ லஸ்ரீ ம. அமரசிங்கபுலவர்)

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த கடநயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழால் ஊஞ்சல் பாட
ஆர்பூத்த சடை மௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த லறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர் கொண்டே கருதி வாழ்வாம்.

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

உவகையொடு மலரயன் மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலைசூட்ட
அவரிடப துவசமகள் வாணந் தூர்ப்ப
அனந்தன் முதலுர கர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பினொடு துடிமுரசு முழவமோங்க

குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க

தும்புருநா ரதர்வேத கீதம் பாட

தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட

வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய

வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய

நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்

நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

அன்னநடை யயிராணி கவிகை தாங்க

அயிலைநிகர் விழியரம்பை ஆசி யேந்த

வன்னமுலை யுருவ சிவெண் கவரி வீச

மணி கொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள

மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க

வியந்திலோத் தமை விகித நடனஞ் செய்ய

நன்னயஞ்சேர் நயினை நகர் தன்னில் வாழும்

நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ

மயிலைநிகர் சுகேசமல ரடிக ணீவ

விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்ற

வேதியர்தம் மகளிர்சுப வசனஞ்சாற்ற

அதிவினைய மொடுசுமனை யாடி காட்ட

அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட

நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்

நாகபரமேஸ்வரியே யாடீருஞ்நல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொயுடனங் கதமுமாட
சாலைவொளிர் பாடகமுஞ் சிலம்புமாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுமக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாதராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

ஆரணியே யம்பிகையே யாட ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாட ருஞ்சல்
பூரணியே புங்கவியே யாட ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாட ரூஞ்சல்
காரணியே காருணியே யாட ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாட ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாட ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில் பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
தனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய மும்மறமும் தழைத்து வாழி
பாவார்வெண்ணீறுபஞ்சாட்சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி.

இக்காலத்தில் பாடப்படும் பாடல்

சீர்வாழி சிவசமயம் வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும் வாழி
பார்வாழி மதிதொறுமும் மாரி வாழி
பசுக்குலம் வேதியர் தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினை நகருறைவோர் வாழி
நீடாயுளன்ன சொர்ணம் நிறைந்து வாழி
ஏர் வாழி இராமச்சந்திர மகிபன் வாழி
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

# திருவூஞ்சல் பாடல்கள்

(பசிக்கவி. சி. பரராஜசிங்கம்)

## திருவூஞ்சல்

சத்தியமே ஊஞ்சலது கால்களாக
சகலமத நெறிகளுமே விட்டமாக
முத்திநெறி தருதர்மம் இழையதாக
மூதறிஞர் செய்தவறம் கயிறதாக
கத்துகடல் வையகமே பலகையாக
கவின்காட்டும் ஊஞ்சலதில் இனிதமர்ந்து
எத்திசையும் போற்றுகின்ற புட்டபர்த்தி
எழிற்சாயி பாபாவே ஆடீரூஞ்சல்.

துறைதோய்ந்த வேதியர்கள் மறைகளோத
தொல்சைவ வைணவர்கள் மலர்கள் தூவ
கறைதோய்ந்த உலகமென அரசபோகம்
கைவிட்ட புத்தமுனி அன்பர்போற்ற
சிறைசெய்து சிலுவையதில் அறையப்பட்ட
தியாகியெனும் யேசுபிரான் அடியாரேத்த
இறைதோய்ந்த இஸ்லாத்தின் நண்பர்போற்றும்
எழிற்சாயி பாபாவே ஆடீரூஞ்சல்.

தேவர்களும் முனிவர்களும் வடந்தொட்டாட்ட
தெய்வீகத் தென்றல்வரும் பெங்களூரில்
மாதவத்தால் வந்தமுனி வசிட்டனாரும்
வந்துநின்று கவிகையது தாங்கிநிற்க
நாரதரும் தும்புருவும் கவரிவீச
நல்லிசைஞர் பல்லிசையில் பரவியேத்த
தாரணியும் வேந்தர்களும் தவிசுதாங்க
தருமத்தின் திருவடிவே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வர ஓசையுடன் நட்டுவாங்கம்
நல்லமிரு தங்கமுடன் வீணையோசை
வேதவொலி உடன் சேர்ந்து விண்ணை முட்டும்
விரும்பிவந்து விறலியுடன் பாணன்பாடும்
பூதவொலி ஐந்துமே மயங்கிநிற்கும்
புட்டபர்த்தி நாயகனார் வடிவுகண்டு
நாதமொடு பஜனை செய்யும் அடியார் போற்றும்
நற்சாயி பாபாவே ஆடீரூஞ்சல்.

றோசாப்பூ மேனியனே ஆடீரூஞ்சல்
துய்யசிகை வேணியனே ஆடீரூஞ்சல்
வாடாப்பூ மலர்ப்பாதம் மனதில்வைக்க
வரமளிக்கும் பகவானே ஆடீரூஞ்சல்
தேடுதற்கும் எட்டாத சிறந்தபாதம்
தேவர்களும் காணவந்து காத்துநிற்க
நாடுதற்குப் பேறுபெற்ற புட்டபர்த்தி
நாயகனே பாபாவே ஆடீரூஞ்சல்.

புது யுகத்தின் நாயகனே ஆடீரூஞ்சல்
பொன்மேனி நாயகனே ஆடீரூஞ்சல்
நவயுகத்தின் விஞ்ஞான விந்தையெல்லாம்
நல்லதென நம்பிநின்றோர் பின்னைபோக
கலியுகத்தில் மெய்ஞ்ஞானம் முன்னேசெல்ல
காதலிப்பர் பகவானைக் கருத்தில் வைத்து
பழவினையை அறுத்தெறியும் பண்புபூண்ட
பரந்தாமப் பகவானே ஆடீரூஞ்சல்.

எந்தனைதான் சமயங்கள் இருந்தபோதும்
எல்லாமே வீட்டுநெறி காட்டுமாறு
அத்தனையும் சங்கமிக்கும் அழகு யாற்றில்
அனைவரையும் நீராட அழைக்கும் பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தெடுக்கும் அடியார்கள் முன்னேசெல்ல
முழுநிலவுச் சந்திரிகா மண்டபத்தில்
சித்திருக்கும் இடங்காட்டி ஊஞ்சல்மேவும்
திருவிருக்கும் சாயீசா ஆடீரூஞ்சல்.

பத்தரெலாம் ஓடிவந்து ஆடிநிற்பர்
பாரிலுளோர் நாடிவந்து கூடி நிற்பர்
சித்தரெலாம் வந்துவந்து பாடி நிற்பர்
சிறுவர்குழாம் வந்து வந்து பாடி நிற்கும்
அத்தனைபேர் தம்மையுமே ஆட்டிவைக்கும்
ஆண்டவனின் திருவருளைக் காட்டிநிற்கும்
முத்தணியும் ஊஞ்சலதில் வீற்றிருந்து
முதுமறையின் பகவானே ஆடீரூஞ்சல்.

வெண்பட்டு உடையணிந்து மேனிகாண
விரும்பிவரும் அடியாரின் வெள்ளமோர்பால்
புண்பட்ட நெஞ்சமதை மாற்றுதற்குப்
புதுமருந்து எடுத்துநிற்கும் அடியரோர்பால்
கண்பட்டு விடுமென்று தேவமாதர்
கவின்பெற்ற ஆராத்தி எடுத்துநிற்ப
பண்பட்ட ஊஞ்சலதில் அமர்ந்திருக்கும்
பகவானே சாயீசா ஆடீரூஞ்சல்.

மறையோதும் அந்தணர்கள் வாழி வாழி!
மனுக்குலமும் பசுக்குலமும் வாழி வாழி!
துறைதோய்ந்த மெய்ஞ்ஞானம் அறமும் வாழி!
தூயநெறி மாதரது கற்பும் வாழி
இறை தோய்ந்த பிரசாந்தி நிலையம் வாழி
ஈடில்லா நல்லரசு இனிதேவாழி
கறை தோய்ந்த மனத்தினரின் மாசகற்றும்
கமலமலர்ப் பகவானே வாழி வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -கண்ணீர் துளிகள் -

# பொறுமையின் சிகரம் எனது துணைவி

காலமெல்லாம் என்னை கண்கலங்காது காத்து நின்ற என் இதயத் தெய்வத்தின் பிரிவுத்துயரில் இருந்து யான் இன்னும் விடுபடவில்லை. தனது கடின உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் என் இல்லறத்தை தளப்பமின்றி நடாத்த உறுதுணையாக நின்ற பெருமையை என்றுமே மறக்க முடியாது. பொறுமையின் சிகரமாய் பண்பின் இருப்பிடமாய் இருந்து வாழ்க்கை எனும் ஓடத்தை சிறந்த முறையில் ஓட்டுவதற்கு என்றுமே பக்கபலமாக இருந்த அந்த நினைவுகளை ஒரு தடவை மீட்டுப் பார்க்கிறேன். அந்த நினைவுகள் என்றுமே மறக்கப்படமுடியாதவை. என் மனைவியினுடைய இழப்பு எனக்கு மட்டுமல்ல எம் அனைத்து உறவுகளுக்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றால் அது மிகையாகாது. இருந்தும் இறைவன் தன்நியதிப்படி தன் சேவைக்கு அவரை அழைத்துக் கொண்டான் என்ற தேற்றத்துடன் அவர் தம் ஆத்ம சாந்திக்காக இறைவனை இருகரம் கூப்பி இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-பாசமுள்ள கணவன்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம் பலவீனம் ஆக்கப்பட்டது

அன்றைய நாள் (01-11-2003) எம் ஒவ்வொருவரதும் வாழ்க்கையிலே என்றுமே எம் உயிர் உள்ளவரை மறக்க முடியாத ஒரு நினைவுகளை சுமந்தநாள். எம்மால் ஜீரணிக்கப்படமுடியாத, யாராலும் ஆற்றுப்படுத்தப்பட முடியாத ஒரு துயரம் நிறைந்த நாள் எனலாம். ஏனெனில் ஒரு தாய்க்கு தாயாக, தந்தைக்கு தந்தையாக...... என்று உலகில் எத்தனை உறவுமுறை உள்ளதோ அத்தனைக்கும் ஏற்றமுறையில் அன்போடும், பண்போடும் உறவு சொல்லியும் இவ்உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைத்த ஒரு ஜீவனுடைய இழப்பு எம் ஒவ்வொருவரையும் வாட்டி வதைக்கின்றது. எம்முடைய வாழ்வின் வளர்ச்சிக்காக, மகிழ்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்து நின்ற ஒரு தாயவளின் இழப்பு ஒன்றல்ல இரண்டல்ல எத்தனையோ குடும்பங்களுக்கு ஒரு பேரிழப்பாக அமைந்து விட்டது. அமரருடைய நேர்மையான கண்ணியமான, கட்டுப்பாடான போக்குகள் எம்மை பெரிதும் கவர்ந்து நின்றன. எம்மோடு அன்பால் உறவாடி தன் மார்மீதும், தோள்மீதும் போட்டு தாலாட்டி சீராட்டி எம்மை வளர்த்தெடுத்து வாழவைத்த எமது கண்கண்ட தெய்வத்தின் அந்த பசுமைபடர்ந்த நினைவுகளை ஒருதடவை மீட்டுப்பார்க்கிறோம். மீண்டும் அது எப்போவரும் என்ற ஆவலில் புழுவாக துடிக்கின்றோம். எம் எல்லோரோடும் அன்போடும், பண்போடும் பாசத்தோடும் பழகி எம் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்த "வாலாம்பிகை" என்ற தெய்வம் எத்தனையோ குடும்பங்களுக்கு வழிகாட்டியாக, ஒளிகாட்டியாக திகழ்ந்து, எம் வாழ்வு சிறக்க தன்னையே அர்ப்பணித்து நின்றது. வாலாம்பிகை என்ற எமது தெய்வம் நடக்கமுடியாத நிலையில் இருந்தபோதும் கூட எத்தனையோ குடும்பங்களுக்கு ஒரு பலமாகவே இருந்து வந்தது. ஆனாலும் அதன் இழப்பின் மூலம் எமது பலம் பலவீனமாக்கப்பட்டு விட்டது. அவருடைய ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூசணியை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அழியாத நினைவுகளுடன்
பிரிவால் துயருறும்
- உறவுகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## – " வாலாம்பி " என்னும் நங்கை –

மனிதர்கள் பிறக்கின்றார்கள் இருக்கின்றார்கள் இறக்கின்றார்கள். இவர்கள் ஏதோ ஒரு வகையில் வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள், மறைகின்றார்கள். பட்டம் பதவிகள், பதாதைகள் என்று பலவிதமான ஆரவாரத்துடன் வாழ்ந்து மறைந்தவர்கள் பலர். இறந்தபின் எனக்கு இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள் என்றுபட்டோலை போட்டுவைத்து விட்டும் இறப்பவர்பலர். எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி தான் வாழ்ந்த சமுதாயத்தில் தன்னால் ஆனதை செய்து மடிந்தவர் பலர். இந்த வகையைச் சார்ந்தவர், ஒருசிலரே, அந்தவகையில் எல்லோரிடமும் கலகலப்பாக பேசி, அவர்களின் நன்மை தீமைகளில், சளைக்காமல் பங்குபற்றி, அவரவர் சூழ்நிலைக்கு ஏற்ப, எல்லோரும் வியக்கும் படியாக தனது ஆற்றலால், நகைச்சுவைமிக்க கதைகளால், சபையைச் சிறப்பு செய்து தனக்கென ஒரு இடத்தைப் பெற்றவர், எனது குடும்பத்தாருக்கு ஒரு அக்காவாக, மச்சாள் என்ற வார்த்தையை உச்சரிக்கும் போது ஒரு தனியான பாசத்தைக் கொட்டி எம்முடன் பாங்குடன் வாழ்ந்த ஒரு ஜீவன். சிரிக்க சிரிக்க எவர்மனதும் நோகாமல் குறை நிறைகளை எடுத்துக் காட்டி, சமாதான சகவாழ்வை உறவுகளுக்கிடையே ஏற்படுத்திய ஒரு நகைச் சுவை நாயகி. உறவு முறைகூறி அனைவரையும் அணைத்து வாழும் பண்பு கொண்ட ஒரு ஆற்றல் மிக்க ஒரு பெண். தாய்க்குத்தாயாகி, தன் உடன் பிறப்பின்பிள்ளைகளை மழலைமுதல் வளர்த்தெடுத்து ஆளாக்கி வளம் கண்ட ஒரு கர்மயோகி, இன்று இவர் நம் மிடையே இல்லை. அவர் தான் அமரத்துவம் அடைந்த "வாலாம்பி" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பெற்ற லலிதாம்பாள் - பொன்னுத்துரை. இவரின் பிரிவால் பிராண நாயகர்துவள்கின்றார், பிள்ளைகள் துடிக்கின்றார்கள், பேரன் மார் பதைக்கின்றார்கள். இவர்கள் உள்ளம் சாந்திபெற எல்லாம் வல்ல அன்னைஸ்ரீ நாகபூஷணியும் காட்டுக்கந்தனும் அருள்வதோடு, அமரத்துவம் அடைந்த லலிதாம்பாளைத்தம் மடியில் வைத்திருப்பாளாக

"வாலாம்பிகை என்ற வடிவிற்கு அரசியே
பாலமுருகன் படித்துப்பட்டம் பெற்று வரும்
காலம் எது வென்று கண்துஞ்சா திருந்தாயே
காலன் தானும் சிரிக்க தன் சபைக்கு அழைத்தாரோ"

**சுபம்**

**கா. ஆ. தியாகராசா**
**முன்னாள் தீவுப்பகுதிதெற்கு**
**உதவி அரசாங்க அதிபரும்**
**பிரதேச செயலரும்,**
**நயினாதிவு நாகபூஷணி அம்மன்**
**ஆலய அறங்காவலர்சபைத் தலைவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தாயே ஆகி வளர்த்தனை போற்றி"

அண்மையில் இறையடி சேர்ந்த திருமதி லலிதாம்பாள் பொன்னுத்துரை அவர்களின் ஒரு மறைவு அக்குடும்பத்தினருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும். "வாலாம்பிகை" என்ற செல்லப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்த அன்னார் அம்பிகையிடத்து மாறாத பக்தி கொண்டுவிளங்கியவர் எனலாம்.

தனது உடன் பிறந்தவர்களின் குழந்தைகளை தனது பிள்ளைகள் போன்று நடாத்தி எல்லோருடைய அன்பையும் நன் மதிப்பையும் பெற்று விளங்கியவர் சுற்றம் சூழ வாழ்ந்து எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்த அன்னாரின் மறைவுக்கு எனது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றேன் மறைந்த அன்னார் இறையடியில் பெருவாழ்வு பெற்று வாழப் பிரார்த்திக்கின்றேன்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

சைவப்புலவர் நா - விசுவலிங்கம் J.P
(ஓய்வுபெற்ற அதிபரும் பிரசித்த நொத்தாரிசும் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறந்த பண்பாளர்

தன்னை நாடி வருவோரின் துயர் போக்கி அருள் பாலிக்கும் அன்னை நாகபூஷணி வீற்றிருக்கும் பெருமைமிகு சிறப்புக் கொண்ட இம் மண்ணில் தோன்றி தன் தனித்துவப்பண்பால் எமது அகங்களில் நிறைந்து கொண்டவர் தான் "வாலாம்பிகை" அக்கா என எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்ட மறைந்த அமரர் லலிதாம்பாள் பொன்னுத்துரை அவர்கள் ஆகும். ஒரு சிறந்த பண்பாளராக நிர்வாகியாக உளவைத்தியராக என்று பல கோணங்களில் அவரை நான் பார்த்துள்ளேன்.

அவருடைய இல்லம் நாடிச் செல்வோரை அவர் இன் முகத்தோடு வரவேற்று உபசரிக்கும் பாங்கு அவரிற்கே தனித்துவமானது நோய் வாய்ப்பட்டு படுக்கையாக இருந்த போதும் கூட அவரின் இப்பண்பு அவரைவிட்டு சிறிதளவு கூட நிங்கவில்லை. ஊரில் உள்ளோர் பலர் பல பிரச்சனைகளுக்கு தீர்வு கேட்டு அவரில்லம் செல்வார்கள். அவர் நிதானத்தோடு ஒரு உளவைத்திய நிபுணர் போல் வருவோரின் பிரச்சனைகளை கண்டறிந்து அதற்கேற்ப சரியான தீர்வுகளையும் வேண்டிய ஆலோசனைகளையும் கூறுவார். வந்தவர்களும் அதனை ஏற்று ஆறுதல் பட்டுச் செல்வதை நான் பலதடவைகள் கண்டு வியந்ததுண்டு.

அது மட்டுமல்ல அவர் நடமாடித் திரிந்தகாலங்களில் ஊரில் நடைபெறும் நிகழ்வுகள் அவருடைய தலைமையின் கீழ் நடைபெற்று வந்துள்ளது. சிறப்பாக நிர்வகித்து அந்நிகழ்வை சிறப்புடன் நடாத்தி முடிக்கும் நிர்வாகத்திறன் அவரிற்கே தனித்துவமானது. நோய்வாய்பட்ட நிலையில் கூட அவருடைய ஆளுமை குறைந்து விடவில்லை. அவரது குடும்பத்தின் நிர்வாகப் பொறுப்பை கூட திறம்பட நிர்வகித்து தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளையின் கல்வி நிலையை உயர்த்தி பல்கலைக் கழகம் செல்ல வைத்த பெருமை அவரிற்கே உரியது. அந்த வகையில் அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா அன்னையின் பாதம் பணிந்து இன்புற பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**சி.வை - சபாரத்தினம்**
**(ஐயா வாத்தியார்)**
**ஓய்வு பெற்ற அதிபர்**
**நயினாதீவு - 5**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறருக்காக வாழ்ந்த பெருந்தகை

நயினாதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி.பொன்னுத்துரை. லலிதாம்பாள் (வாலாம்பிகை) அவர்கள் தன்வாழ்க்கையை அமைத்துக் கொண்ட நாள் முதல் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்து இறைவி பாதம் அடைந்தார். அன்னார் தனது சகோதர, சகோதரியின் பிள்ளைகளின் நலனில் பெரிதும் அக்கறை உடன் இருந்து அவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என பெரும் பாடுபட்டு நல்ல நிலைக்கு கொண்டு வந்தவர் இவர் கிராமத்தில் எங்கு நிகழ்வுகள் நடை பெற்றாலும் அங்கு சென்று தன் முழுஒத்துழைப்பையும் வழங்கி நிகழ்வுகள் சிறப்புற அமைய பாடுபட்டவர் மற்றவர்களை மதித்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றி வாழ்ந்து வந்த படியால் அனைவரின் பாராட்டையும் பெற்றார். அன்னார் இறுதிக் காலத்தில் நோய் வாய்ப்பட்டு இருந்த போதிலும் தன்னால் உருவாக்கப் பட்டவர்களின் ஆதரவு கிடைக்கப்பெற்று நன்கு பராமரிக்கப் பட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய அம்பாள் அருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

சொ.பகீரதன்
அதிபர்
யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்

| கண்டுபிடிப்பு | ஆண்டு | கண்டுபிடிப்பாளர் | நாடு |
|---|---|---|---|
| அச்சுக்கூடம் | சுமார் 1455 | ஜோஹன் கூடன்பர்க் | ஜெர்மனி |
| அணுகுண்டு | 1945 | ஜே.ராபர்ட் ஓப்பன் பெய்மர் | அமெரிக்கா |
| ஆகாயவிமானம் | 1903 | ஆர்வில் வில்பர் சகோதரர்கள் | அமெரிக்கா |
| இசைத்தட்டு | 1948 | டாக்டர் பீட்டர் கோல்ட் | அமெரிக்கா |
| இயந்திரத் துப்பாக்கி | 1718 | ஜேம்ஸ் பக்கிள் | பிரிட்டன் |
| இரட்டைக் குவிவில்லை(Bifocal) | 1780 | பெஞ்சமின் பிராங்கனின் | அமெரிக்கா |
| இடிதாங்கி | 1752 | பெஞ்சமின் பிராங்க்லின் | அமெரிக்கா |
| ஊமைப்படம் | 1885 | லூயிஸ் வொட்டர்மேன் | அமெரிக்கா |
| எக்ஸ் கதிர் | 1895 | வில்ஹெலம் கே.ராண்ட்ஜங்ன் | ஜெர்மனி |
| ஒலிபெருக்கி (Loud speader) | 1900 | ஹாரஸ் ஷார்ட் | பிரிட்டன் |
| ஒளிப்பதிவு முறை | 1948 | Dr. பிட்டர் கோல்ட்மார்ட் | அமெரிக்கா |
| கடிகாரம் | 1462 | பார்தோமியு மான்மீபி | இத்தாலி |
| கடிகாரம் (பெண்டுலம்) | 1656 | கிறிஸ்டியன் ஹேஜென்ஸ | நெதர்லாந்து |
| கண்ணாடி (கறையுள்ளது) | சுமார் 1080 | ஆக்ஸ்பர்க் | ஜெர்மனி |
| காகிதம் | 105 | --- | சீனா |
| கர்ப்புரேட்டர் | 1876 | காப்லியெப்டெயில்மர் | ஜெர்மனி |
| கார் (பெட்ரோல்) | 1888 | காசுல் பென்ஸர் | ஜெர்மனி |
| கால அளவி (குரோனோமீட்டர்) | 1735 | ஜான்ஹாரிசன் | பிரிட்டன் |
| கல்வனோமீட்டர் | 1834 | ஆண்ட்ரி மேரி அம்பியர் | பிரான்சு |
| கல்குலேட்டர் | 1642 | பாஸ்க்கல் | பிரான்சு |
| கிராமபோன் இசைத்தட்டு | 1878 | தோமஸ் அல்வா எடிசன் | அமெரிக்கா |
| குளிர்பதனப் பெட்டி | 1850 | ஜேம்ஸ் காரிஸன் | |
| | | அலெக்சாண்டர் காட்லின் | அமெரிக்கா |
| கூட்டல் இயந்திரம் | 1623 | வில்ஹெலம் ஷிக்காடு | ஜெர்மனி |
| கைக்கடிகாரம் | 1462 | பார்த்தலோமோ மான்பிடி | இத்தாலி |
| கொம்பியூட்டர் | | எம் டுரிங் | பிரித்தானியா |
| சலவை இயந்திரம் (மின்) | 1907 | ஹார்லி மெஷின் கம்பெனி | அமெரிக்கா |
| சிமெண்ட் | 1824 | ஜோசப் ஆஸ்ப்தின் | பிரிட்டன் |
| சினிமா (இசையுடன்) | 1923 | டாக்டர் லீ.டீ. பாரஸ்ட் | அமெரிக்கா |
| செயற்கை இதயம் | 1957 | வில்லெம் கோல்ட் | நெதர்லாந்து |
| செல்போன் | 1908 | Dr. ஜே.பிராண்டன் பெர்கர் | சுவிட்சர்லாந் |
| சூப்பர் கம்பியூட்டர் | 1976 | வானடேஸல் | அமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சைக்கிள் | 1940 | கிரிக்பாட்ரிக் மாக்மில்லன் | பிரிட்டன் |
| சைக்கிள் ரயர் | 1836 | ஜே.பி. டன்லப் | பிரிட்டன் |
| சேவிங் ரேசர் | 1895 | கிங் ஜி. கில்லட் | அமெரிக்கா |
| டிரான்சிஸ்டர் | 1948 | பார்டீன். ஷாக்லீ. பிராட்டைன் | அமெரிக்கா |
| டீசல் இயந்திரம் | 1895 | ருடோல்ஃப் டீசல் | ஜெர்மனி |
| டைனமோ | 1832 | ஹைப்போலைட் பிக்சை | பிரான்ஸ் |
| தட்டச்சுப்பொறி | 1808 | பெல்லிகிரின் டாரி | இத்தாலி |
| தந்தி | 1787 | எம். லாம்மோண்ட் | பிரான்சு |
| தந்திக் குறியீடு | 1837 | சாமுவேல் எஃப். பி.மோர்ஸ் | அமெரிக்கா |
| தானியங்கி துப்பாக்கி | 1918 | ஜான் பிரேஷனிங் | அமெரிக்கா |
| திரைப்படம் | 1895 | நிக்கோலஸ், ஜூன லூமியர் | பிரான்சு |
| தீப்பெட்டி | 1826 | ஜான் வாக்கர் | பிரிட்டன் |
| தொலைக்காட்சி (இயந்திரவியல்) | 1926 | ஜான் லாக்கி பெய்ட் | பிரிட்டன் |
| தொலைக்காட்சி (மின்னணுவியல்) | 1927 | பி.டி. ஃபார்ன்ஸ்வொர்த் | அமெரிக்கா |
| தொலைபேசி | 1876 | அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் | அமெரிக்கா |
| தொலைநோக்கி | 1808 | ஹன்ஸ் லிப்பர்ஸ்கை | நெதர்லாந்து |
| தையல் இயந்திரம் | 1829 | பார்த்த லெமி திம்மொனியர் | அமெரிக்கா |
| நீராவி இயந்திரம் | 1765 | ஜேம்ஸ் வாட் | பிரிட்டன் |
| நீர்மூழ்கிக் கப்பல் | 1776 | டேவிட் புஷ்னல் | அமெரிக்கா |
| நியூட்ரான் குண்டு | 958 | சாமுவெல் மோஹென் | அமெரிக்கா |
| நைலோன் | 1937 | டாக்டர் வாலெஸ்ஹெச ஹார்த்தஸ் | அமெரிக்கா |
| பலூன் | 1783 | ஜாக்வஸ், ஜோசப் | பிரான்ஸ் |
| பறக்கும் குடை (Parachute) | 1797 | ஏ.ஜே. கார்னெரின் | பிரான்ஸ் |
| பற்ற வைப்பான் (Electrie Welder) | 1877 | எலிஷா தோம்சன் | அமெரிக்கா |
| பால் பதனப்படுத்தல் (Pasteurization) | 1867 | லூயிஸ் பாஸ்டர் | எகிப்து |
| புகைப்படம் (உலோகத்தின்மேல்) | 1826 | ஜே. என். நிப்சி | பிரான்சு |
| புகைப்படம் (காகிதத்தின் மேல்) | 1835 | டபிள்யூ.எச்.பாக்ஸ்டல் பேர்ட் | பிரிட்டன் |
| புகைப்படம் (படச்சுருள் மேல்) | 1888 | ஜான் கார்பட் | அமெரிக்கா |
| பேனா (Fountain Pen) | 1884 | லூயிஸ் இ.வாட்டர்மன் | அமெரிக்கா |
| பேனா (Ballpoint Pen) | 1888 | ஜான். ஜே.லௌட் | அமெரிக்கா |
| மின்கல அடுக்கு (Electrie Battery) | 1800 | அலிஸ்ஸாண்ட்ரோ வோல்டா | இத்தாலி |
| மின்மாற்றி (Transformer) | 1831 | மைக்கேல் ஃபாரடே | பிரிட்டன் |
| மின்விளக்கு | 1879 | தோமஸ் அல்வா எடிசன் | அமெரிக்கா |
| மின்னணுக் கணிப்பொறி | 1824 | டாக்டர். ஆலன் எம்.டூரிங் | பிரிட்டன் |
| மைக்கிரஸ்கோப் | 1590 | ஜே.ஜொன்ஸன் | நெதர்லாந்து |
| மைக்கிரோபோன் | 1876 | அலெக்ஸாண்டர் கிரகம்பெல் | அமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| றப்பர் (டயர்கள்) | 1846 | தோமஸ் ஹான்காக் | பிரிட்டன் |
| ரேடியோ | 1901 | மாக்கோனி | இத்தாலி |
| ரேடியோ ரெலிகிராபி | 1864 | Dr. மாக்லன் லூமிஸ் | அமெரிக்கா |
| ரேடார் | 1922 | ஏ.எச். டெய்லர், லியோசு.யங் | அமெரிக்கா |
| ரேசர் (மின்சாரம்) | 1931 | ஜேக்கப் ஷிக் | அமெரிக்கா |
| வெப்பமானி | 1593 | கலிலியோ கலிலி | இத்தாலி |
| லேசர் | 1960 | டாக்டர். சார்லஸ் எச்.டவுண்ஸ் | அமெரிக்கா |
| லிப்ட் | 1852 | எலிஷா ஜி.ஓட்டிஸ் | அமெரிக்கா |
| ஜெட் எஞ்சின் | 1937 | சா:பிராங்க் விட்டில் | பிரிட்டன் |
| ஹெலிகொப்டர் | 1924 | ஏதியன் ஓஹ்மிச்சென் | பிரான்சு |
| ஹைட்ரஜன் குண்டு | 1952 | எட்வர்டு டெல்லர் | அமெரிக்கா |

# சர்வதேச முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| ★ ஜனவரி | 12 | தேசிய இளைஞர் தினம் |
| ★ பெப்ரவரி | 28 | தேசிய அறிவியல் தினம் |
| ★ பெப்ரவரி | 14 | உலக காதலர் தினம் |
| ★ மார்ச் | 08 | சர்வதேச பெண்கள் தினம் |
| ★ மார்ச் | 11 | பொதுநலவாய தினம்' |
| ★ மார்ச் | 13 | உலக சிக்கன தினம் |
| ★ மார்ச் | 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| ★ மார்ச் | 21 | உலக வன தினம் |
| ★ மார்ச் | 22 | உலக நன்னீர் தினம் |
| ★ மார்ச் | 23 | உலக வளிமண்டல தினம் |
| ★ ஏப்ரல் | 01 | உலக முட்டாள் தினம் (1564 தொடக்கம்) |
| ★ ஏப்ரல் | 07 | சர்வதேச சுகாதார தினம் |
| ★ ஏப்ரல் | 12 | உலக விண்வெளி தினம் (ககாரின் விண்வெளிக்கு முதன்முதல் சென்ற தினம்) |
| ★ ஏப்ரல் | 18 | உலக மரபுரிமை தினம் |
| ★ ஏப்ரல் | 22 | உலக புவி தினம் |
| ★ மே | 01 | உலக தொழிலாளர் தினம் |
| ★ மே | 03 | உலக பத்திரிகைச் சுதந்திர தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ★ | மே | 08 | உலக செஞ்சிலுவைச் சங்க தினம் |
| ★ | மே | 09 | உலக அன்னையர் தினம் |
| ★ | மே | 15 | சர்வதேச குடும்ப தினம் |
| ★ | மே | 17 | உலக தகவல் தொடர்பு தினம் |
| ★ | மே | 18 | உலக நூதனசாலை தினம் (அரும்பொருள்) |
| ★ | மே | 31 | உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் |
| ★ | ஜூன் | 05 | உலக சூழல் பாதுகாப்பு தினம் |
| ★ | ஜூன் | 07 | உலக தொல் பொருளியலாளர் தினம் |
| ★ | ஜூன் | 20 | உலக போதைப் பொருள் தடுப்பு தினம் |
| ★ | ஜூன் | 27 | உலக நீரழிவாளர் தினம் |
| ★ | ஜூலை | 05 | உலக சுற்றாடல் தினம் |
| ★ | ஜூலை | 11 | உலக மக்கள் தொகை தினம் |
| ★ | ஜூலை | 17 | உலக வறுமை ஒழிப்பு தினம் |
| ★ | ஜூலை | 28 | உலக அகதிகள் தினம் (1951 தொடக்கம்) |
| ★ | ஆகஸ்ட் | 06 | உலக சமாதான தினம் |
| ★ | ஆகஸ்ட் | 29 | தேசிய விளையாட்டு தினம் |
| ★ | செப்டம்பர் | 08 | உலக எழுத்தறிவு தினம் |
| ★ | செப்டம்பர் | 16 | உலக ஓசோன் தினம் |
| ★ | செப்டம்பர் | 25 | உலக காது கேளாதோர் தினம் |
| ★ | செப்டம்பர் | 27 | உலக சுற்றுலா தினம் |
| ★ | அக்டோபர் | 01 | உலக சிறுவர் தினம் |
| ★ | அக்டோபர் | 02 | உலக மதுவிலக்கு தினம் |
| ★ | அக்டோபர் | 03 | உலக குடியிருப்பு தினம் / நல்லொழுக்க தினம் |
| ★ | அக்டோபர் | 04 | உலக விலங்கு நலதினம் |
| ★ | அக்டோபர் | 05 | உலக சிறுமியர் தினம் |
| ★ | அக்டோபர் | 06 | உலக ஆசிரியர் தினம் |
| ★ | அக்டோபர் | 09 | உலக தபால் நிலைய தினம் |
| ★ | அக்டோபர் | 14 | உலக தரநிர்ணய தினம் |
| ★ | அக்டோபர் | 15 | உலக வெள்ளைப் பிரம்பு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ அக்டோபர் 24 ஐக்கிய நாடுகள் தினம்
- ★ அக்டோபர் 30 சர்வதேச சேமிப்பு தினம்
- ★ நவம்பர் 14 குழந்தைகள் தினம்
- ★ டிசம்பர் 01 உலக எய்ட்ஸ் தினம்
- ★ டிசம்பர் 03 உலக வலது குறைந்தோர் தினம்
- ★ டிசம்பர் 10 மனித உரிமை தினம் (1945 இல் ஐ.நா.சபை ஏற்றுக் கொண்டது)
- ★ டிசம்பர் 23 விவசாயிகள் தினம்

# பெரும் பாலைநிலங்களும் நாடுகளும்

| பாலை நிலங்கள் | | நாடுகள் |
|---|---|---|
| 01. சஹாரா | - | வட ஆபிரிக்கா |
| 02. லிபியா | - | வட ஆபிரிக்கா |
| 03. ஆஸ்திரேலியன் | - | ஆஸ்திரேலியா |
| 04. விக்டோரியா | - | ஆஸ்திரேலியா |
| 05. சிரியா | - | அரேபியா |
| 06. அரேபியன் | - | அரேபியா |
| 07. கோபி | - | மாங்கோலியா |
| 08. ரூபால்காலி | - | அரேபியா |
| 09. கல ஹரி | - | போத்ஸ்வானா |
| 10. பெருமணல் | - | ஆஸ்திரேலியா |
| 11. தக்ளா மக்கான் | - | சீனா |
| 12. அருந்தா | - | ஆஸ்திரேலியா |
| 13. கராகும் | - | தென். மேற்கு துருக்கிஸ்தான் |
| 14. நுபியா | - | வட ஆபிரிக்கா |
| 15. தார் | - | வடமேற்கு இந்தியா |
| 16. கிஸில்கும் | - | மத்திய துருக்கிஸ்தான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வ குடியிருப்புக்களும் நாடுகளும்

| | | |
|---|---|---|
| மரவீடு | - | பிலிப்பைன்ஸ் |
| புல்வீடு | - | ஹவாய் |
| பற்றைவீடு | - | அவுஸ்ரேலியா |
| மூங்கில் வீடு | - | கலி∴போனியா |
| செங்கட்டி வீடு | - | சீனா |
| காகித வீடு | - | ஜப்பான் |
| குகை வீடு | - | ஆபிரிக்கா |
| சுரங்க வீடு | - | சைபீரியா |
| பனிக்கட்டி வீடு | - | கிறீன்லாந்து |
| குடிசை வீடு | - | வடஅமெரிக்கா |
| மரக்குற்றி வீடு | - | நியூ கினியா |

# நாட்டின் தேசிய விளையாட்டுக்கள்

| | | |
|---|---|---|
| 01. அவுஸ்திரேலியா | - | கிரிக்கட் |
| 02. இலங்கை | - | எல்லே / கரபந்தாட்டம் |
| 03. பாகிஸ்தான் | - | ஹொக்கி |
| 04. துருக்கி | - | மல்யுத்தம் |
| 05. ஜப்பான் | - | கராத்தே / ஜூடோ |
| 06. ஸ்கொட்லாண்ட் | - | கால்பந்து |
| 07. கனடா | - | பனி ஹொக்கி |
| 08. இந்தியா | - | ஹொக்கி / கபடி |
| 09. ஐக்கிய அமெரிக்கா | - | பேஸ்போல் |
| 10. ஸ்பெயின் | - | ஜல்லிக்கட்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளின் தேசிய சின்னங்கள்

1. அமெரிக்கா - தங்கத்தடி
2. அவுஸ்திரேலியா - கங்காரு
3. அயர்லாந்து - ஹப்ரக் மலர்
4. இந்தியா - சிங்கத்தின் தலை
5. இலங்கை - வாளுடன் சிங்கம்
6. ஈரான் - ரோஜா மலர்
7. ஈராக் - சிவப்பு ரோஜா
8. எகிப்து - தாமரை பூ
9. கனடா - வெள்ளை மலர் (அல்லி)
10. சீனா - திராட்சை மலர்
11. சுவிற்சர்லாந்து - இடல்விஸ் மலர்
12. பாகிஸ்தான் - பிறை
13. பெல்ஜியம் - அசலியா மலர்
14. போலந்து - சோலி மலர்
15. பிரான்ஸ் - அல்லி மலர்
16. பிரித்தானியா - ரோஜா மலர்
17. யப்பான் - கூட்டுப்புழுக்கூடு
18. ருமேனியா - பூவரசம் பூ
19. ஜெர்மனி - கான் பூ
20. ஸ்பெயின் - கருடன்
21. டென்மார்க் - கடற்கரைச்செடி

ஐக்கிய நாட்டு சபையின் கொடி நீல நிறம். இரு ஒலிவ் மரக்கிளைகளுக்கு இடையில் உலகப் படத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| ★ தெற்கின் பிரித்தானியா | - | நியூசிலாந்து |
| ★ நள்ளிரவுச் சூரியன் தெரியும் நாடு | - | நோர்வே |
| ★ சூரியன் உதிக்கும் நாடு | - | ஜப்பான் |
| ★ நைல் நதியின் கொடை | - | எகிப்து |
| ★ ஆயிரம் ஏரிகள் நாடு | - | பின்லாந்து |
| ★ உலகத்தின் தடுக்கப்பட்ட இடம் | - | திபேத் |
| ★ ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சர்லாந்து |
| ★ ஐரோப்பாவின் காப்பகம் | - | பெல்ஜியம் |
| ★ ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| ★ புனித நாடு | - | பாலஸ்தீனம் |
| ★ உலகின் சர்க்கரைக் கிண்ணம் | - | கியூபா |
| ★ தங்கப் போர்வை நாடு | - | அவுஸ்ரேலியா |
| ★ மரகதத் தீவு | - | அயர்லாந்து |
| ★ பொற்கோபுர நாடு | - | பர்மா |
| ★ சூரியன் மறையும் நாடு | - | இங்கிலாந்து |
| ★ இருண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| ★ மத்தியதரைக் கடலின் திறவு கோல் | - | ஜிப்ரோல்ரர் நீரிணை |
| ★ பொற்கதவு நகரம் | - | சான்பிரன்சிக்கோ (அமெரிக்கா) |
| ★ பொற்கோல நகரம் | - | அமிர்தசரஸ் (இந்தியா) |
| ★ கனவுக்கோபுர நகரம் | - | ஒக்ஸ்போர்ட் (இங்கிலாந்து) |
| ★ அழியா நகரம் (ஏழுமலைகளின் நகரம்) | - | ரோமபுரி |
| ★ ஐரோப்பாவின் போர்க்களம் | - | பெல்ஜியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ ஐரோப்பாவின் கோழிக்கூடு - நெதர்லாந்து
